<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>

**<u>OS.NO.05/2013</u>** **தேதி. 11.03.2024**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. வா.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024 ம் ஆண்டு 11.03.2024 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜேஸ்வரி |
| க/பெ. | : | அருள் |
| வயது | : | 47/2024 |
| தொழில் | : | கூலி |
| இனம் | : | பெண் |
| கிராமம் | : | நம்பரை |
| வட்டம் | : | ஆற்காடு |
| மாவட்டம் | : | இராணிபேட்டை |

மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 5 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

நானும் 5 ம் பிரதிவாதி மணிமேகலையும் உடன் பிறந்த சகோதரிகள் ஆவோம். நம்பரை வழிதோப்பு முகமது பேட்டை ரோட்டில் அருகாமையில் அமைந்துள்ள நான்கு ஏக்கரில் ஒரு மாடி வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த நிலமும் வீடும் என் மாமனார் ஐய்யாசாமி பெயரில் உள்ளது. அந்த வீட்டிற்கு கதவு எண் 305/22 என்று சொன்னால் சரியல்ல கதவு எண் 305/305 ஆகும். என் மாமியார் சகுந்தலா பெயரில் நம்பரை கிராமம் பிள்ளையார் கோயில் தெருவில் ஒரு வீடு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கதவு எண் 305 ல் உள்ள வீட்டில் முக்கால் பகுதியில் நானும் மற்றொரு பகுதியை மணிமேகலையும், மற்றும் சிவக்குமாரும் வசித்துவருகிறார்கள். 3 ம் பிரதிவாதி ஜெயபால் அதே கதவு எண் 305 ல் சிமெண்ட் சீட் போட்ட வீடு கட்டி வசித்துவருகிறார். 7 ம் பிரதிவாதி சிவக்குமாரும் அந்த நான்கு ஏக்கரில் ஒரு வீடு கட்டி வசித்துவருகிறார். நான் வசித்துவரும் வீடு ஒரு அடுக்கு ஆகும். நான் தாக்கல் செய்த

தாவாவில் மேற்கூறிய வீடுகள் குறித்து குறிப்பிட்டு கூறவில்லை. மேற்படி வீடுகளின் பத்திரங்கள் யாரிடம் உள்ளது என்றால் 5ம் பிரதிவாதி மணிமேகலையிடம் உள்ளது. நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று மேற்படி வீடுகள் யார் பெயரில் உள்ளது என நான் தெரிந்துகொள்ளவில்லை. மேற்படி வீடுகளில் யார் யார் பெயரில் வீட்டு வரி ரசீது கட்டுகிறார்கள் என்றால் என் வீட்டிற்கு நான் கட்டுகிறேன். அவரவர் வீட்டிற்கு அவர்கள் கட்டிக்கொள்கிறார்கள் தனித்தனியாக வசித்துவருவதால் தனித்தனியாக கட்டுகிறார்கள் என்றால் சரிதான்.

மறுவிசாரணை:– இல்லை.